Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:– 72/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–1

| | | | |
|---|---|---|---|
| Name | சுப்பன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**<u>முதல் நிலை விசாரணை:–</u>**

1. நான் தற்போது கொளிஞ்சானூரில் வசித்துக்கொண்டு வயோதிகம் காரணமாக நான் தற்சமயம் எந்த வேலையும் செய்யவில்லை. 2019–ம் ஆண்டு எங்கள் ஊர் கோயில் பூசாரி பட்டத்தரசியம்மன் கோயிலுக்குச் சென்றார். அப்போது கோயிலிலிருந்த சாமியின் கழுத்திலிருந்த அரைப் பவுன் பொட்டுத்தாலியை யாரோ திருடிச் சென்றுவிட்டது தெரியவந்தது.

2. ஊரே சேர்ந்து தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. பின்னர் இது சம்மந்தமாக காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். புகார் மனு **அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நகையை இன்னும் நான் பெற்றுக்கொள்ளவில்லை. நீதிமன்றக் காவலில் உள்ளது. 2 கிராம் பொட்டுத்தாலிகள்(2 எண்ணிக்கை) **அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை:–</u>**

1. நான் அளித்த புகார் மனுவில் என்ன எழுதியிருந்தது என்று எனக்குத் தெரியாது. போலீசார் புகார் மனுவை எழுதிக்கொண்டார்கள் நான் கையெழுத்து மட்டும் போட்டேன். போலீசார் விசாரணையின்போது தாலி வாங்கியதற்கான ரசீது ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. சாமியிடமிருந்து தாலி எப்போது காணாமல்போனது என்று எனக்குத் தெரியாது. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. நகை யார் திருடிச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:– 72/2021 Date:– 23.09.2025

Deposition of witness for prosecution :– PW :–2

| | | | |
|---|---|---|---|
| Name | தண்டபானி | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:–**

1. நான் தற்போது கொளிஞ்சானூரில் வசித்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 5, 6 வருடங்களுக்கு முன்பு 2019–ம் ஆண்டு கொளிஞ்சனூரிலுள்ள பட்டத்தரசியம்மன் கோயிலில் நான் பூசாரியாக உள்ளேன். வழக்கமாக நான் மாலையில் லைட் போட்டுவிட்டு காலையில் வந்து லைட்டை நிறுத்திவிட்டுச் செல்வேன். நான் அன்று காலை வந்து பார்த்தபோது கோயிலின் சட்டரிலிருந்த பூட்டு உடைக்கப்பட்டிருந்தது.

2. பின் ஊர் நாட்டமைக்கு தகவல் சொல்லி ஊர்க்காரர்கள் வந்து பார்த்தார்கள். சாமியின் கழுத்திலிருந்த அரைப் பவுன் பொட்டுத்தாலி, தாலி கோர்த்திருந்த வெள்ளிக் கம்பி ஆகியவை காணாமல் போயிருந்தது. நாட்டமை சுப்பனிடம் தகவல் சொல்ல அவர் வந்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:–**

1. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பட்டத்தரசியம்மன் கோயிலைச் சுற்றி வீடுகள் உள்ளன என்றால் சரிதான். எந்த சம்பவம் நடைபெற்றாலும் பக்கத்திலுள்ளவர்களுக்கு தெரியும் என்றால் சரிதான். கோயில் சாவி என்னிடமும், ஊர்க்கவுண்டரிடம் ஒன்று உள்ளது. தாலியை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 72/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-3

| Name | ரங்கன் | Age | |
|---|---|---|---|
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது கொளிஞ்சானூரில் வசித்துக்கொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். 2019-ம் ஆண்டு பட்டத்தரசியம்மன் கோயில் கோயில் பூசாரி கோயில் பூட்டை உடைத்துவிட்டதாக எங்களுக்கு தகவல் சொன்னார். நாங்கள் சென்று பார்த்தபோது சாமியின் தாலி பொட்டுக்கள் காணாமல் போயிருந்து இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பட்டத்தரசியம்மன் கோயிலைச் சுற்றி வீடுகள் உள்ளன என்றால் கடை உள்ளது. எந்த சம்பவம் நடந்தாலும் கடைக்காரருக்கு தெரியவரும் என்றால் சரிதான். காணாமல்போன தாலியை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. சம்பவம் குறித்து பூசாரி கூறிதான் எனக்குத் தெரியும்.

**மறுவிசாரணை –** இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

CC.No:- 72/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-4

| | | | |
|---|---|---|---|
| Name | கருப்பன் என்ற செங்கோட்டையன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

**முதல் நிலை விசாரணை:-**

1. நான் தற்போது கொளிஞ்சானூரில் வசித்துக்கொண்டு மேசன் வேலை செய்து வருகிறேன். 2019-ம் ஆண்டு பட்டத்தரசியம்மன் கோயில் கோயில் பூசாரி கோயில் பூட்டை உடைத்துவிட்டதாக எங்களுக்கு தகவல் சொன்னார். நாங்கள் சென்று பார்த்தபோது சாமியின் தாலி பொட்டுக்கள் காணாமல் போயிருந்து இது சம்மந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளித்தோம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை:-**

1. சம்பவத்தை பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. பட்டத்தரசியம்மன் கோயிலைச் சுற்றி வீடுகள், கடைகள் உள்ளன என்றால் சரியல்ல. காணாமல்போன தாலியை யார் எடுத்துச் சென்றார்கள் என்று எனக்குத் தெரியாது. சம்பவம் குறித்து பூசாரி கூறிதான் எனக்குத் தெரியும்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

| |
|---|
| சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.<br><br>நீதித்துறை நடுவர்,<br>சத்தியமங்கலம். |

Judicial Form No.53
(see Rule 42)
DEPOSITION OF WITNESS
Chapter XXIII Code of Criminal Procedure
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM

C.C. No:-72/2021 Date:- 23.09.2025

Deposition of witness for prosecution :- PW :-5

| | | | |
|---|---|---|---|
| Name | சந்திரசேகரன் | Age | |
| Father/Husband Name | | Taluk | |
| Village | | | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act 1969 | | | |

<u>**முதல் நிலை விசாரணை:-**</u>

1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது கையெழுத்து **அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. கோயில் நகை திருடுபோனது சம்மந்தமாக காவல்துறை உதவி ஆய்வாளர் விசாரித்தார்கள். ஒரு கையெழுத்தை ஸ்டேசனில் வைத்து எதிரியைப் பிடித்த பின்பு கையெழுத்து செய்தேன். மற்றொரு கையெழுத்தை புகார் மனு அளித்த பின்பு போட்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அவரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் அடிப்படையில் இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது.**

<u>**குறுக்கு விசாரணை:-**</u>

1. கடந்த 19.12.2019–ம் தேதியன்று எதிரியை போலீசார் நீதிமன்ற உத்தரவுப்படி போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்கும்போது எனக்கு தகவல் சொல்லி வரச்சொன்னார்கள் என்றும், போலீசார் விசாரணையில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார் என்றும், அதில் நானும் மணி என்பவரும் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். அதே தேதியன்று தொட்டம்பாளையத்திலுள்ள எதிரியின் பழைய வீட்டின் பக்கமுள்ள முற்புதரிலிருந்து எடுத்து ஆஜர் செய்த 2 கிராம் எடையுள்ள தங்கப் பொட்டு – இரண்டு, என் முன்னிலையிலும் சாட்சி மணி முன்னிலையிலும் போலீசார் கைப்பற்றி கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார்கள் என்றும், அதில் நாங்கள் கையெழுத்து செய்தோம் என்றால் சரிதான். நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு முதல்நிலை சாட்சியத்தில் அதுகுறித்து எதுவும் கூறாமல் இருக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள கையெழுத்தை நான் காவ்ல நிலையத்தில் வைத்துப் போட்டேன். நான் குறுக்கு விசாரணையில் கூறியுள்ள விபரங்களை முதல்நிலை விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். வழக்கு விபரங்கள் போலீசார் கூறிதான் எனக்குத் தெரியும் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை –</u> இல்லை.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என்முன் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்துப்பார்த்து/விளக்கி கூறி சரி என ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

நீதித்துறை நடுவர்,
சத்தியமங்கலம்.